# மொனராகலை பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மொனராகல் பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த தொலைக்காட்சி, மீளாய்வாண்டின் போது கிடைத்த 4000 லீற்றர் தண்ணீர் பவுசர் மற்றும் 2000 லீற்றர் கொள்ளவான 05 பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகள் என்பவற்றின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நீதி மன்றத் தண்டப் பண வருமானமான ரூபா 1,815,583 தொகையானது நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,123,725 தொகையாக ரூபா 2,308,142 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம்மான ரூபா 99,083 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,553,390 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 9,281,067 ஆக இருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 75,191,927 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,995,628 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,386,376 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,878 | 1,776 | 1,102 |
| (ii) | வாடகை | 9,147 | 9,595 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 600 | 496 | - |
| (iv) | ஏனைய வருமானம் | - | - | - |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 99,083 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,715,140 |

### 2.2.3 கடை வாடகை

----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் முறையான பிரகாரம் வாடகையை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கபடாமல் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் வாடகை தீர்மானிக்கப்பட்டு 1999 தொடக்கம் 2012 வரையான காலத்தில் 117 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 யூலை 25 வரையிலும் வாடகையை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பஸ் நிலையத்தின் 75 கடைகளில் ரூபா 1,801,610 தொகையும், பொதுச் சந்தையில் 25 கடைகளில் ரூபா 365,756 தொகையும், 24 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையில் ரூபா 178,613 தொகையும் என நிலுவை வாடகைப் பணம் அறவிட வேண்டியிருந்தன.

(இ) 1999 – 2004 வரையான காலத்தில் வாடகைக் காலத்தில் வாடகைக்கு வழங்கப்பட்ட புதிய பஸ் நிலைய வியாபாரத் தொகுதியின் 21 கடைகளில் ரூபா 4,339,649 தொகையான நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புதிய பஸ் நிலைய வியாபாரத் தொகுதியில் 01, 02, 05, 11, 12 மற்றும் 16 ஆம் இலக்கக் கடைகள் முறையான கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாமல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) 2006 ஏப்ரல் 10, 2006 மே 26, 2006 ஆகஸ்ட் 01 மற்றும் 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதிகளின் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபங்களின் முறையே 28, 28(i), 28(ii) மற்றும் 36 ஆம் இலக்கங்களுக்கு முரணாகவும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) (i) ஆம் பிரிவின் பிரகாரமும் உள்ளூராட்சி ஆனையாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் இன்றி 40 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் முறையான அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட மூன்று ஊழியர்களுக்காக உள்ளூராட்சி திணைக்களத்தினால் சம்பளம் மற்றும் படிகள் மீளளிப்புச் செய்யப்படாதிருந்ததுடன் அவர்களிற்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது சம்பளம் மற்றும் படிகளுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 907,122 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

(அ) 2004 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான நூலகக் கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி மாதம் வரையிலும் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்படவில்லை. இதற்காக வேறொரு இடம் வாடகைக்குப் பெறப்பட்டு பிரதேச செயலாளரின் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு 8 வருட காலத்தில் வாடகையாக ரூபா 578,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2008 ஆம் ஆண்டில் குறித்தொதுக்க மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 118 பிளாஸ்டிக் கதிரைகளில் 62 கதிரைகள் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் 2012 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்பிலிடப்பட்ட போதிலும் தேறாதிருந்த ரூபா 117,316 பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,700,218 ஆக இருந்தது.

(உ) இடம் மாறிச் சென்ற 36 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டியிருந்த ரூபா 588,132 தொகையான கடன் மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் அது தொடர்பாக காலப்பகுப்பாய்வு பெறக் கூடிய வகையில் ஏடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 23,715,232 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்கொன்று செயற்படாதிருந்துடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி மீதி ரூபா 31,075 ஆக இருந்தது.

(ஏ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 24,965,247 ஆக இருந்தது.

(ஐ) வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 44,527 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமானம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஒ) ஒவ்வொரு வருட இறுதியிலும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 203 இன் ஏற்பாடுகளில் வழங்கப்பட்டுள்ள முறையில் மெய்மையாய்வுச் சபையினால் களஞ்சியப் பொருட்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரையான காலத்தில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துதல் தாமதமாகியமையால் ரூபா 11,943 தொகை மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்